# 11

# கலாச்சாரத்தை மதித்தல் தேவைப்பட்ட ஒரு சபை

## (1 கொரிந்தியர் 11:1-16)

*1 கொரிந்தியர் நிருபத்தில் உள்ள அதிகம் கடினமான ஒரு வசனப்பகுதி 11:1-16ல் காணப்படுகிறது.*[1] *இவ்வசனப்பகுதியில் உள்ள சில விபரங்கள் - எடுத்துக்காட்டாக, ஒரு பெண் "தூதர்களினிமித்தம்"*[2] *தனது தலையில் முக்காடு இட்டுக்கொள்ள வேண்டும் என்று பவுல் கூறியபோது அவர் எதை அர்த்தப்படுத்தினார் என்பது போன்ற விபரங்கள் - புரிந்துகொள்ளக் கடினமானவையாக உள்ளன என்றாலும், முதன்மைச் சிந்தனை பற்றிக்கொள்ளப்பட முடியும்: ஜெபம் செய்யப் படுகையிலோ அல்லது தீர்க்கதரிசனம் கூறப்படுகையிலோ, பெண்கள் தங்கள் தலையில் முக்காடு இட்டுக் கொள்ள வேண்டும்; இதற்கு நேர்மாறாக ஆண்கள், முக்காடு இடப்படாத தலையுடன் ஜெபிக்க வேண்டும் அல்லது தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும் (11:4, 5). ஆகையால் இவ்வசனப் பகுதி அர்த்தப் படுத்துவது என்ன என்பதைப் புரிந்துகொள்ளுதல் மிகவும் கடினமாக இருப்பதில்லை; இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு இவ்வசனப் பகுதியின் நடைமுறைப் பயன்பாடுதான் கடினமானதாக உள்ளது. குறிப்பாக கிறிஸ்தவர்கள், ஆராதனை ஊழியங்களில் கலந்துகொள்ளும் பெண்கள், ஆண்களுக்குத் தங்கள் கீழ்ப்படிதலைக் காண்பித்தல் என்ற வகையில் தங்கள் தலையில் முக்காடு இட்டுக் கொள்ள வேண்டும் என்று போதிக்கிறதா இல்லையா என்பதில் கருத்து வேறுபடுகின்றனர். சபைகூடுகையில் பெண்கள் தங்கள் தலையை எதைக் கொண்டாவது மூடிக்கொண்டிருக்க வேண்டும் என்ற நம்பிக்கையைச் சிலர் பலமாகப் பற்றிக்கொண்டுள்ளனர்.*[3] *மற்றவர்கள், இன்றைய நாட்களில் ஒரு பெண் ஆராதிக்கும்போது தனது தலையை மூடிக்கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தை மறுத்துள்ளனர்.*

*இதில் யார் சரியாக இருக்கிறார்? பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ளுதல் பற்றிய பவுலின் முதல் நூற்றாண்டு அறிவுறுத்துதல்களை நாம், இருபத்தியோராம் நூற்றாண்டின் கிறிஸ்தவ சகோதரிகளுக்கு நேரடியாக நடைமுறைப் படுத்த வேண்டுமா? இந்த விஷயத்தை நாம் ஒரு விரிவான சந்தர்ப்பப் பொருளில் படித்து, கிறிஸ்துவுக்கும் கலாச்சாரத்துக்கும் இடையில் உள்ள உறவின் வெளிச்சத்தில் இதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தாக வேண்டும். மூன்று பொதுவான கேள்விகளைக் கேட்டு அவற்றிற்குப் பதில் அளிப்பதன் மூலம் இதை நாம் செய்வோம்.*

### கலாச்சாரம் என்றால் என்ன?

கிறிஸ்துவுக்கும் கலாச்சாரத்திற்கும் இடையில் உள்ள உறவைப்

புரிந்துகொள்வதற்கு நாம், "கலாச்சாரம்" என்பது ஒரு வாழ்வின் வழியை அர்த்தப்படுத்துகிறது என்பதை அறிவது அவசியமாக உள்ளது, இந்த வழியானது மக்களின் மாதிரியாக உள்ள - அவர்கள் சிந்திக்கும் வகை, அவர்கள் ஒருவர் பிறருடன் உறவுபடும் வகை மற்றும் அவர்கள் செய்கிற விஷயங்கள் போன்ற - ஒவ்வொரு விஷயத்தையும் உள்ளடக்குகிறது.

உதாரணமாக, நகரத்தில் வாழ்பவர்களின் கலாச்சாரம் கிராமத்தில் வாழ்பவர்களின் கலாச்சாரத்தில் இருந்து முற்றிலும் நேர்மாறானதாக உள்ளது. உலகத்தின் பல்வேறு பாகங்களில் உள்ள மக்கள் பல்வேறு வகையான சமூக உறவுகளை அனுபவிக்கின்றனர்; குடும்பமும் சமூகமும் கட்டியெழுப்பப் பட்டுள்ள மற்றும் மதிக்கப்படக்கூடிய வழிகள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. ஆப்பிரிக்கா, ஐரோப்பா, இந்தியா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகியவற்றில் வாழும் மக்கள் வெவ்வேறு வழிகளில் சிந்திக்கின்றனர்; அவர்களின் உலகக் கண்ணோட்டங்களும் மதிப்பீட்டு முறைமைகளும் ஒன்றுபோல் இருப்பதில்லை. காலங்கள் தோறும் நிலவியுள்ள கலாச்சாரங்கள் யாவற்றிற்கும் முற்றிலுமாக இந்தக் கூற்றுகள் உண்மையானவைகளாக உள்ளன: ஒவ்வொரு கலாச்சாரமும் மற்றவற்றில் இருந்து வேறுபடுகிறது.

## கிறிஸ்துவுக்கும் கலாச்சாரத்துக்கும் இடையிலான உறவுமுறை என்ன?

இப்போது நிலவும் ஆயிரக்கணக்கான கலாச்சாரங்களுடன் - உலகம் முழுவதிலும் மாறுபட்ட வாழ்வின் வழிகளைக் கொண்டுள்ள பல்வேறு மக்களுடன் - கிறிஸ்து எவ்வாறு உறவுபடுகிறார்?

*முதலாவது, கிறிஸ்துவின் பலியினுடைய பயன்கள் ஒவ்வொரு கலாச்சாரத்தின் மக்களுக்கும் விரிவாக்கப் பட்டுள்ளது.* எல்லாருக்காகவும் கிறிஸ்து மரித்தார் என்று புதிய ஏற்பாடு கூறுகிறபோது (ரோமர் 5:18; 2 கொரிந்தியர் 5:14), எந்தக் கலாச்சாரமும் தேவனுடைய வழிக்கு மிகவும் அந்நியமானதாக இருப்பதில்லை என்றே அது அறிவிக்கிறது. எல்லா மக்களும் தேவனால் அன்புகூரப்படுகின்றனர் மற்றும் எல்லாரும் இரட்சிக்கப்படும்படி அவரால் அழைக்கப்படுகின்றனர் (வெளிப்படுத்தின விசேஷம் 22:17). கொரிந்து நகரில் யூதர்களும் கிரேக்கர்களும், செல்வர்களும் ஏழைகளும், கனமுள்ளவர்களும் கனமற்றவர்களும் ஆகிய யாவருமே கிறிஸ்து மற்றும் அவரது மக்களுடனான ஐக்கியக்கிற்குள் வரவேற்கப்பட்டிருந்தனர்.

*இரண்டாவது, எந்தக் கலாச்சாரமும் தேவனுடைய இராஜ்யத்துடன் சமானப்படுத்தப்பட முடியாது.* இயேசு, "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என்று அறிவித்தார் (யோவான் 18:36). ஒவ்வொரு கலாச்சாரத்தின் மக்களும் பாவம் நிறைந்தவர்களாக உள்ளனர் (ரோமர் 3:23); குற்றம், பொல்லாங்கு செய்தல், சுயநலம் மற்றும் ஒழுக்கவீனம் ஆகியவற்றினால் மனிதகுலம் வாதைப்படுகிறது. பேதுரு, "மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (நடபடிகள் 2:40; RSV). அந்தக் காலத்தில் இருந்து இந்தக் காலம் வரையிலும் ஒவ்வொரு தலைமுறையும் "பொல்லாத சந்ததியாகவே" இருந்துள்ளது.

*மூன்றாவது, ஒவ்வொரு கலாச்சாரமும் தேவனுடைய தர அளவைகளைக்*

கொண்டு மதிப்பிடப் படவேண்டும். எந்தக் கலாச்சாரமும் தேவனுடைய இராஜ்யத்திற்குச் சமமானதாக இருப்பதில்லை என்பதால், கலாச்சார நடைமுறைகளைக் கடைப்பிடித்தல் தேவனுடைய அங்கீகாரத்தைக் கொண்டுள்ளது என்று நாம் யூகிக்க முடியாது. கொரிந்து நகரில் விக்கிரக ஆராதனை, ஒழுக்கவீனம் ஆகியவை வழக்கத்தில் இருந்தன, ஆனால் அவைகள் தேவனைப் பிரியப்படுத்தவில்லை. சில கலாச்சாரங்கள் மனித பலிகளை வழக்கமாக அளித்து வந்துள்ளன மற்றும் பிற கலாச்சாரங்கள், உயிருள்ள விதவைகளை, அவர்களின் மரித்த கணவருடைய உடலுடன் எரித்துள்ளன அல்லது புதைத்துள்ளன. குறிப்பிட்ட சில சமூகங்கள், பலதாரத் திருமணம் அல்லது ஆண் ஓரினச்சேர்க்கை என்பதைப் பொதுவாக நடைமுறைப் படுத்தியுள்ளன, மற்றும் பல சமூகங்கள் வேசித்தனத்தை - திருமணமாகாத துணைவர்களிடையே பாலுறவை - வாழ்வின் சாதாரண பாகம் என்ற வகையில் ஏற்றுக்கொண்டுள்ளன. உலகத்தின் சில பாகங்களில், வழக்கமாக தேவையற்ற சிறுபிள்ளைகளை பூதங்களால் அழிக்கப்பட்டு மரிக்கும்படி விடப்பட்டிருந்தனர். இப்படிப்பட்ட பழக்கங்கள் வெவ்வேறு கலாச்சாரங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தன என்ற உண்மையானது, அவற்றை தேவன் எப்போதாவது அங்கீகரித்தார் என்று அர்த்தப்படுத்துவது இல்லை.

இதற்கு மறுபறத்தில், எந்தக் கலாச்சாரத்திலும் உள்ள சில அம்சங்கள் தேவனால் அங்கீகரிக்கப் பட்டுள்ளன. உதாரணமாக, பொல்லாங்கு செய்பவர்களைத் தண்டிக்கவும் நன்மை செய்பவர்களுக்குப் பலன் அளிக்கவும் தேவன் அரசாங்கங்களுக்கு அனுமதி அளித்துள்ளார் (ரோமர் 13:1-7). கண்ணியமாக இருப்பதையும் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நல்ல நடக்கைகளைப் பயன்படுத்துவதையும் அவர் நிச்சயமாகவே அங்கீகரிப்பார் (காண்க 1 பேதுரு 3:8; KJV). குடும்பங்களும் சமூகங்களும் தங்களுக்குச் சொந்தமானவர்களைத் தாங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதை நாம் அறிகிறோம் (1 தீமோத்தேயு 5:8).

கலாச்சார நடைமுறைகளைப் பற்றி தேவன் என்ன நினைக்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ள முடிவது எவ்வாறு? கிறிஸ்துவுக்குள் விசுவாசம் கொண்டுள்ளவர்களுக்கு, அந்தக் கேள்விக்கு ஒரே ஒரு பதில்தான் உள்ளது: தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தில் காணப்படும் தர அளவைகளுடன் கலாச்சார நடைமுறைகளை ஒப்பிடுவதன் மூலமாகவே அவற்றை நாம் மதிப்பிட முடியும். மனித பலி, விக்கிரக ஆராதனை அல்லது வேசித்தனம் - அல்லது கண்ணியம், தயவு, பரோபகாரம் - பற்றி தேவன் என்ன நினைக்கிறார் என்று நாம் அறிய விரும்பினால், நாம் அவரது வசனத்தைக் கலந்து ஆலோசிக்க முடியும். வேதாகமம் போதிப்பது என்ன என்பதைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, பெரும்பான்மையான கலாச்சாரங்களில், தேவன் அங்கீகரிக்கும் பழக்க வழக்கங்களும் அவர் அங்கீகரியாத நடைமுறைகளும் இருப்பதை நாம் உணர்ந்தறிய முடியும்.

கடைசி நியாயத்தீர்ப்பில் மக்கள், ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தின் உறுப்பினர்கள் என்ற வகையில் அல்ல, ஆனால் தனிநபர்கள் என்ற வகையிலேயே நியாயந்தீர்க்கப் படுவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 20:12-15; 2 கொரிந்தியர் 5:10). மிகவும் மோசமான சூழ்நிலைகளிலும்கூட, விசுவாசம் நிறைந்த பரிசுத்தவான்கள், நித்தியத்திற்கும் இரட்சிக்கப் பட்டிருக்கும்படியான

வாழ்வை வாழக்கூடும். இதற்கு எதிரிடையாக, மிகவும் சிறப்பான கலாச்சாரத்தில் கூட (இவற்றில் *எதுவும்* தேவனுடைய இராஜ்யத்திற்குச் சமமானதாக இருப்பதில்லை) பலர் - சொல்லப்போனால் பெரும்பான்மையானவர்கள் (மத்தேயு 7:13,14) - இழந்து போகப் படுவார்கள்.

## கொரிந்தியர்களிடம் இருந்து கற்றுக்கொள்ளக்கூடிய கொள்கைகள் என்ன?

கிறிஸ்துவுக்கும் கொரிந்தியர்களின் கலாச்சாரத்திற்கும் இடையிலான உறவை நாம் ஆராய்கையில், எல்லாக் காலங்களுக்கும் மற்றும் எல்லா இடங்களுக்குமான சில கொள்கைகளை நாம் கற்றறிய முடியும்.

**கலாச்சாரப் பிறழ்வுகளைப் புறக்கணியுங்கள்**

*கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்கள் கலாச்சாரத்தின் பிறழ்வுகளைப் புறக்கணிக்க வேண்டியிருந்தனர்.* கொரிந்து நகரில் இருந்த மக்கள் மனித ஞானத்தை நேசித்தனர், ஆனால் அங்கு இருந்த கிறிஸ்தவர்கள் ஞானத்தைப் பற்றிய உயர்த்தப்பட்ட தங்களின் கண்ணோக்கைப் புறக்கணிக்க வேண்டியிருந்தனர். கொரிந்து நகரில் இருந்த பலர் ஒழுக்கவீனம் மற்றும் விக்கிரக ஆராதனை ஆகியவற்றினால் குற்றப்பட்டிருந்தனர், ஆனால் அந்த நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் இவ்வகையான வாழ்வு நடைகளைத் துறக்கும்படி கேட்டுக்கொள்ளப் பட்டனர் (1 கொரிந்தியர் 6:18; 10:14).

அவ்வாறே, புதிய ஏற்பாட்டின்படியான மற்ற கிறிஸ்தவர்களும் தங்கள் கலாச்சாரங்களின் பாவம் நிறைந்த அம்சங்களைப் புறக்கணிக்கும்படி சீர்பொருத்தமான வகையில் அழைக்கப்பட்டனர். கிறிஸ்தவர்கள் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாதிருக்கும்படியும் மறுரூபமாகும்படியும் வேண்டிக் கேட்டுக்கொள்ளப்பட்டனர் (ரோமர் 12:1, 2). சகோதரர்கள் "உலகத்தால் கறைபடாதபடிக்கு" தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று யாக்கோபு கூறினார் (யாக்கோபு 1:27; காண்க 1 யோவான் 2:15-17). இயேசு, தம்மைப் பின்பற்றுபவர்கள் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும், அவர்கள் "உலகத்தாராக" இருக்கக் கூடாது என்று கூறினார் (யோவான் 17:15, 16). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர்கள் உலகத்தைப் பற்றிய பாவம் நிறைந்த ஒவ்வொன்றையும் எதிர்த்து நிற்க வேண்டும் மற்றும் தங்களைச் சுற்றிலும் உள்ளவர்களில் இருந்து வேறுபட்டு இருக்க வேண்டும். முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் உலகத்தைச் சீர்திருத்தும்படியல்ல, ஆனால் உலகத்தைப் புறக்கணிக்கும்படியே அழைக்கப்பட்டிருந்தனர். அதுபோன்றே ஒவ்வொரு காலத்திலும் உள்ள கிறிஸ்தவர்கள், உலகத்தை மாற்றும்படி எதிர்பார்க்கப்படாமல், உலகத்தில் காணப்படும் பாவத்தை விட்டு விலகி இருத்தலில் கவனம் குவிக்கும்படியே கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

**கலாச்சாரச் செயல்முறைகளைத் தழுவிக்கொள்ளுங்கள்**

*கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள்,* சட்டங்களும் பழக்க வழக்கங்களும் ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்கு வழிநடத்தும் வகையில், *தங்கள் கலாச்சாரச் செயல்முறைகளைத் தழுவிக்கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர்.* பவுல்

தம்மைத் தாமே ஒரு உதாரணமாகப் பயன்படுத்தினார். அவர் "எல்லாருக்கும் எல்லாமும்" ஆனார் (1 கொரிந்தியர் 9:22). அவர் யூதர்களின் வாழ்வுநடையின்படி வாழுதல் அனுகூலமாக இருந்தபோது, அவ்வாறே செய்தார், மற்றும் அவர் புறஜாதியாரின் கலாச்சாரத்தைத் தழுவிக்கொள்ளுதல் கிறிஸ்துவுக்குள் ஆத்துமாக்களை வழிநடத்தத் தமக்கு உதவும்போது, அதையே செய்தார்.

பவுலின் கொள்கையை இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் எந்த கலாச்சாரத்திலும் நடைமுறைப் படுத்த முடிவது எவ்வாறு? நாம் உலகத்தின் பாவம் நிறைந்த வழிகளைத் தழுவிக்கொள்ள முடியாது என்பது தெளிவு; நாம் பாவத்தின் ஒவ்வொரு வகையையும் புறக்கணிக்க வேண்டும். இருப்பினும், இழந்துபோகப்பட்டுள்ளவர்களை அடைவதற்கு முயற்சி செய்ய, கிடைக்கும் ஆதாரமூலங்கள் யாவற்றையும் பயன்படுத்த முடியும். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு பவுலுக்குக் கிடைத்திருந்தது என்றால், அவர் அதன் அனுகூலத்தை பயன்படுத்தியிருக்க மாட்டாரா? பவுலைப் போன்றே "எப்படியாகிலும் சிலரை இரட்சிப்பதற்கு" நாம் "எல்லாருக்கும் எல்லாமும்" ஆவதை நாடவேண்டும். செயல்விளைவில் பவுல், "நான் யூதருக்கு யூதனைப் போலானேன்; கிரேக்கருக்கு கிரேக்கனைப் போலானேன்" என்று கூறினார். இன்றைய நாட்களில் அவர் பிரசங்கிப்பார் என்றால், அவர் "இந்தியாவில் நான் இந்தியக் கிறிஸ்தவர்களுக்குப் பொருத்தமான வகையில் நடந்து கொண்டு பிரசங்கிக்கிறேன்; ஆப்பிரிக்காவில் நாம் ஆப்பிரிக்க சகோதரர்களால் ஏற்றுக்கொள்ளப் படும்வகையில் உடுத்தி தேவனை ஆராதிக்கிறேன்" என்று கூறுவார் அல்லவா? நாம் எங்கிருந்தாலும், அங்குள்ள மக்களுடன் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வதில் அதிகம் செயல் விளைவுள்ளவர்களாக இருக்கும்படிக்கு, உள்ளூர் பழக்கவழக்கங்களைத் தழுவிக்கொள்ள வேண்டும்.

**கலாச்சார ஒழுகலாறுகளைக் கடைப்பிடியுங்கள்**

*கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் உள்ளூர் ஒழுகலாறுகளைக் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருந்தனர்.* அதாவது அவர்கள், தேவனுடைய நிபந்தனைகளுக்கு கொரிந்தியக் கலாச்சாரப் பழக்க வழக்கங்கள் நேரெதிராக இராதவரையில் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர். அவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தால், மற்றவர்களை ஆளுகை செய்த சட்டங்களில் இருந்து தாங்கள் விடுவிக்கப் பட்டிருந்ததாகவோ அல்லது சமூகத்தில் உள்ள எழுதப் படாத விதிகளைக் கடைப்பிடிப்பது அவசியம் இல்லை என்பதாகவோ நினைக்கக் கூடாதிருந்தது.

ஒரு பெண் ஆராதிக்கும்போது அவள் தனது தலைக்கு முக்காடு இட்டுக் கொள்ள வேண்டும் என்பது கொரிந்து நகரில் பழக்கமாக இருந்தது என்பது உறுதி.[4] அவ்வாறு செய்யத் தவறுதல் என்பது அவள் தனது கணவருக்கு அவமரியாதை காண்பித்தலாக இருந்தது. கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள், "இப்போது நாம் கிறிஸ்தவர்களாக இருக்கிறோம்; நாம் கிறிஸ்துவுக்குள் சுயாதீனர்களாக இருக்கிறோம். ஆகையால் நாம், புறதெய்வ வணக்கத்தவரான நமது அயலகத்தாரின் பழக்க வழக்கங்களினால் கட்டுப்படுத்தப் பட்டிருப்பதில்லை, மற்றும் ஜெபிக்கும்போதோ அல்லது தீர்க்க தரிசனம் உரைக்கும்போதோ, நமது பெண்கள் தங்கள் தலைக்கு முக்காடு இட்டுக்கொள்ளத் தேவையில்லை" என்று

வாதம் செய்திருக்கக் கூடும். ஒருவேளை அவர்கள், ஆண்களும் பெண்களும் கிறிஸ்துவுக்குள் சமமானவர்களாக இருப்பதால் (காண்க கலாத்தியர் 3:28), கிறிஸ்தவப் பெண்கள் தங்கள் மீது சமூகம் வைத்த கட்டுப்பாடுகளில் இருந்து விடுவிக்கப் பட்டிருந்தனர் என்றுகூட நினைத்திருக்கலாம்.

கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது கொரிந்தியர்களை அவர்களின் கலாச்சாரரீதியான எதிர்பார்ப்புகளில் இருந்து விடுவிக்கவில்லை என்பதைக் கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் உணர்ந்து அறிய வேண்டும் என்று பவுல் விரும்பினார்; ஆண்களுக்குக் கீழ்ப்படிதலைக் காண்பிக்கப் பெண்கள் உள்ளூர் பழக்க வழக்கத்தைப் பின்பற்ற வேண்டியிருந்தனர். பெண்கள் தங்கள் தலைகளில் முக்காடு இடாமல் ஜெபித்தல் அல்லது தீர்க்கதரிசனம் கூறுதல் கூடாது என்று அவர்களுக்கு அவர் கூறினார். ஒரு பெண் அவ்வாறு செய்தல் அவளது "தலையாகிய" அவளது கணவரைக் கனவீனப் படுத்துதலாக இருக்கும் (11:5); அது அவள் இனியும் தனது கணவருக்குக் கீழ்ப்பட்டவள் அல்ல என்று அவள் அறிவித்தலுக்குச் சமமானதாக இருக்கும். கீழ்ப்படிதலின் கொள்கை - ஆணுக்குப் பெண்ணும், கிறிஸ்துவுக்கு ஆணும் மற்றும் தேவனுக்குக் கிறிஸ்துவும் கீழ்ப்படிந்திருத்தல் (11:3) - ஒரு நித்திய கொள்கையாக உள்ளது. தலைகளில் முக்காடுகள் இடுதல் என்பது கொரிந்து சமூகத்தில் அந்தக் கொள்கையைப் பிரதிபலித்த காரணத்தினால், அவற்றை அணிதலின் பழக்கத்தைக் கிறிஸ்தவப் பெண்கள் புறக்கணிக்கக் கூடாதிருந்தது.[5] பெண்கள் ஆண்களைக் காட்டிலும் குறைவான முக்கியத்துவம் உடையவர்கள் என்று பவுல் கூறவில்லை. அதே போன்று, ஆணோ அல்லது பெண்ணோ மற்றவரைச் சாராதவராக இருப்பதும் இல்லை. உண்மையில் ஒவ்வொரு ஆணும் தான் இருப்பதற்குப் பெண்ணுக்குக் கடன்பட்டிருக்கிறார் (11:11, 12). இருந்தபோதிலும், பெண்கள் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும் என்று பவுல் கூறினார்.[6]

## நடைமுறைப் பயன்பாடு

இந்த ஆழ்ந்த சிந்தனைகள் நம்மை, நாம் தொடங்கிய கேள்விக்குக் கொண்டுவருகின்றன: தலைகளில் முக்காடுகள் இடுதல் பற்றிய உள்ளூர் வழக்கத்தைக் கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாக இருந்ததால் அதையே நாம் செய்தல் அவசியமாக உள்ளதா? குறிப்பாக, பெண்கள் இன்றைய நாட்களில் சபைகூடுகைகளில் ஆராதிக்கும்போது தங்கள் தலைகளில் முக்காடு இட்டுக்கொண்டாக வேண்டுமா?[7] "இல்லை" என்பதே பதிலாக உள்ளது.

*"வெட்கமானால் ..."* கலாச்சாரத்தில் எழுதப்படாத சட்டம் என்னவாக உள்ளது? அமெரிக்க நாட்டில் இன்றைய நாட்களில் பெண்கள் தலைகளில் முக்காடு இட்டுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப் படுவதில்லை, ஏனெனில் கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்குத் தரப்பட்டிருந்த கட்டளை, அவர்கள் புரிந்துகொண்டிருந்த கலாச்சார ரீதியான எழுதப்படாத சட்டங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது. பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ளுதல் என்பது, ஒரு கலாச்சாரம் அதே புரிந்துகொள்ளுதலைக் கொண்டிருக்கும்போது மாத்திரமே கட்டுப்படுத்தும் ஒரு நிபந்தனையாக உள்ளது.

பவுல் பின்வருமாறு எழுதினார்:

*ஜெபம்பண்ணுகிற போதாவது, தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற போதாவது, தன் தலையை மூடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்; அது அவளுக்குத் தலை சிரைக்கப்பட்டது போலிருக்குமே. ஸ்திரீயானவள் முக்காடிட்டுக் கொள்ளாவிட்டால் தலைமயிரையும் கத்தரித்துப்போடக்கடவள்; தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொண்டிருக்கக்கடவள் (11:5, 6).*

ஒரு பெண் தனது தலைமுடியைக் கத்தரித்துப் போடுதல் அல்லது தலையைச் சிரைத்துக்கொள்ளுதல் என்பதை ஒப்பிட்டதன் மூலமாக, பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ளாது இருத்தல் எவ்வளவு வெட்கக் கேடானது என்பதைப் பவுல் விவரித்தார். "தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும் சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால்" அவள் தனது தலையை முக்காடு இடாமல் தீர்க்கதரிசனம் உரைத்தல் அல்லது ஜெபித்தல் என்பதும் வெட்கக் கேடாக உள்ளது என்று அவர் கூறினார். ஒரு பெண் தனது தலைமுடியைக் கத்தரித்துப் போடுதல் அல்லது தனது தலையைச் சிரைத்துக்கொள்ளுதல் என்பது அவளுக்கு வெட்க கேடாக இருந்தது என்று கொரிந்தியர்கள் ஒப்புக் கொண்ட காரணத்தினால், பவுல் தமது விவாதம், தாம் விரும்பிய செயல்விளைவைக் கொண்டிருக்கும் என்பதை அறிந்திருந்தார். பவுலின் மிகச்சரியான விவாதம், பெண்கள் தங்கள் தலைமுடியைக் கத்தரித்துப் போடுதல் வெட்கக் கேடாக இருக்கும் என்று நம்புகிற மக்களிடத்தில் மாத்திரமே நடைமுறைப் படுவதாக இருக்கிறது.

*"உங்களுக்குள்ளே நிதானித்துக்கொள்ளுங்கள்: ..."* பவுல், "உங்களுக்குள்ளே நிதானித்துக்கொள்ளுங்கள் ..." என்று எழுதியபோது, அவர் தமது தொடக்ககால வாசகர்களின் கலாச்சார ரீதியானபுரிந்துகொள்ளுதலுக்குத் திரும்பவும் வேண்டுகோள் விடுத்தார். "ஒரு ஆண் நீண்ட முடியைக் கொண்டிருந்தால் அது அவனுக்கு கனவீனமாக உள்ளது என்று இயற்கையேகூட போதிப்பதில்லையா?" (11:13-15அ). ஒரு ஆண் நீண்ட முடியைக் கொண்டிருத்தல் அவனுக்கு கனவீனமாக உள்ளது என்று ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு இடத்திலும் மக்களுக்கு "இயற்கை" போதிக்கிறதா? சில கலாச்சாரங்களில், ஆண்கள் மற்ற கலாச்சாரங்களைக் காட்டிலும் நீண்ட முடியை வளர்க்கின்றனர். ஒரு பெண்ணைப் போன்று ஒரு ஆண் நீண்ட முடியைக் கொண்டிருத்தல் என்பது இயற்கைக்கு மாறானதாக உள்ளது என்று பவுல் வலியுறுத்தினார்.[8] அவரது விவாதம், ஒரு ஆண் ஆணைப் போலவும் ஒரு பெண் பெண்ணைப் போலவும் காணப்பட வேண்டும் என்ற கலாச்சார ரீதியான எதிர்பார்ப்புகளில் அடிப்படையில் அமைந்திருந்தது.

மேலும் கொரிந்து நகரில் இருந்த ஒரு பெண் தனது தலைக்கு முக்காடு இட்டுக்கொள்ளாதிருத்தல் என்பது, அவள் தன் கணவருக்குக் கீழ்ப்படிதலுடன் இருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காண்பித்தது. உதாரணமாக அமெரிக்காவில் இன்றைய நாட்களில் தலைக்கு முக்காடு இட்டுக்கொள்ளுதல் என்பது ஒரு பெண் கீழ்ப்படிதலுடன் இருக்கிறாள் என்று காண்பிக்கிறதா? தலைக்கு முக்காடு இட்டுக்கொள்ளாதிருத்தல் என்பது அவள் தனது கணவருக்குக் கீழ்ப்படிவது இல்லை என்று கருத்துத் தெரிவிக்கிறதா? "இல்லை" என்பதே பதிலாக உள்ளது; ஆனால் இதற்கு சில கலாச்சாரங்களில் "ஆம்" என்பது

பதிலாக இருக்கும். பவுலின் விவாதமானது கலாச்சார ரீதியான எழுதப்படாத சட்டங்களின் அடிப்படையில் அமைந்திருந்தது என்பதாலும் கொரிந்து நகரில் பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ளுதல் கொண்டிருந்த அதே அர்த்தத்தை இன்றைய நாட்களில் - பெரும்பான்மையான இடங்கள் - கொண்டிராததாலும், ஜெபிக்கும்போது அல்லது தீர்க்கதரிசனம் உரைக்கும்போது பெண்கள் தங்கள் தலைகளில் முக்காடு இட்டுக்கொள்ள வேண்டும் என்ற குறிப்பான நிபந்தனை இனியும் நடைமுறைப் படுவது இல்லை.

கொரிந்தியர்களுக்குத் தரப்பட்ட நிபந்தனைக்குப் பின்னால் உள்ள கொள்கை இன்னமும் உண்மையானதாகவே உள்ளது: பெண்கள் தங்கள் கணவர்களுக்கு இன்னமும் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தில், பெண் தனது கணவருக்குக் கீழ்ப்படிந்திருத்தலைச் சில வழக்கங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன என்றால், அந்த வழக்கங்களைக் கிறிஸ்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு கலாச்சாரமானது, பெண்ணானவள் தனது கணவரை மதிப்பதற்கு முகத்திரை ஒன்றை அணிய வேண்டும் என்று கட்டளையிடுகிறது என்றால், அந்த சமூகத்தில் உள்ள கிறிஸ்தவப் பெண் முகத்திரை அணிய வேண்டும்.

இந்தக் கொள்கையானது விவரிவாக்கப்பட முடியும். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, “ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்” என்று கூறப்பட்டது (1 கொரிந்தியர் 16:20அ; ரோமர் 16:16). அந்தக் கட்டளைக்கு நாம் எவ்வாறு கீழ்ப்படிய வேண்டும்? நான் வாழுமிடத்தில் மக்கள் ஒருவர் மற்றவரை முத்தம்கொடுத்து வாழ்த்துவதில்லை; அவர்கள் கைகளைக் குலுக்குவதாலேயே ஒருவர் மற்றவரை மிகவும் அடிக்கடி வாழ்த்துகின்றனர். ஒருவேளை நாம், நமது கலாச்சார ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்து ஒருவர் மற்றவரை வாழ்த்த வேண்டும் என்று கூறமுடியும். ஒரு கலாச்சாரத்தில் அது, நாம் ஒருவர் மற்றவரை பரிசுத்த முத்தம் கொடுத்து வாழ்த்த வேண்டும் என்று அர்த்தப்படலாம்; இன்னொரு கலாச்சாரத்தில் கைக்குலுக்குவதன் மூலம் வாழ்த்த வேண்டும் என்று அர்த்தப்படலாம்; இன்னொரு கலாச்சாரத்தில் கலாச்சார ரீதியாக ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய வாழ்த்துதல் முறையைப் பயன்படுத்துதல் என்று அர்த்தப்படலாம்.

கட்டளை ஒரே மாதிரியானதாகவே உள்ளது, ஆனால் கட்டளையைச் செயல்படுத்துதலின் வழியானது உள்ளூர் பழக்க வழக்கங்களைப் பொறுத்து மாறுபாடுகிறது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமது சொந்த கலாச்சாரத்தில் உள்ள எழுதப்படாத சட்டங்களையும் ஒழுகலாறுகளையும் மதிக்க வேண்டும்.

## முடிவுரை

நாம் இப்பாடத்தை முடிக்கும் இவ்வேளையில், கிறிஸ்தவர் தமது கலாச்சாரத்துடன் கொண்டுள்ள ஏற்புடைய உறவானது சபைப் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க எவ்வாறு உதவ முடியும் என்று கேட்கலாம். சபைக்குழுமத்திற்குள் எழுகின்ற பல பிரச்சனைகள், கிறிஸ்துவுக்கும் கலாச்சாரத்திற்கும் இடையிலான உறவைத் தவறாகப் புரிந்துகொள்வதன் அடிப்படையிலேயே எழுகின்றன என்பது பதிலாக உள்ளது. கிறிஸ்தவர்கள் தங்கள் கலாச்சாரமானது தேவனுடைய இராஜ்யத்துடன் சமானப்பட்டதாக இருக்க வேண்டும் என்ற தவறான கருத்தைக் கொண்டிருக்கக் கூடும். சில வேளைகளில் ஊழியக்காரர்கள்

தாங்கள் உள்நுழையும் கலாச்சாரத்தைத் தழுவுவதில் தவறுகின்றனர். கலாச்சார ஒழுகலாறுகளைக் கடைப்பிடிக்கத் தவறுவதால் அவர்கள் மற்றவர்களுக்கு எண்ணமற்ற வகையில் அந்நியப்படுகின்றனர்.

சபைக்குழுமங்கள், புதிய ஏற்பாட்டில் காணப்படும் காலம்கடந்து நிற்கும் கொள்கைகள் மற்றும் அந்தக் கொள்கைகள் முன்வைக்கப்படும் கலாச்சார விவரிப்புகள் ஆகியவற்றை வித்தியாசப் படுத்தாத காரணத்தினால் பிரச்சனைகளைக் கொண்டிருக்கலாம். கீழ்ப்பட்டிருத்தல் என்பது காலம் கடந்து நிற்கும் ஒரு கொள்கையாகும், ஆனால் தலையில் முக்காடிடுதல் என்பது நாம் நிலைத்திருக்கத் தேவையற்ற ஒரு கலாச்சார நிபந்தனையாக உள்ளது. காலம் கடந்து நிற்பது - கிறிஸ்தவ யுகத்தின் முடிவு வரையிலும் ஒழியாது இருப்பதை நோக்கங்கொண்டது - எது மற்றும் முதல் நூற்றாண்டின் சபைக்கு மாத்திரம் நடைமுறைப்பட்டதாக இருந்தது எது என்பவற்றிற்கும் இடையில் வித்தியாசத்தைக் கண்டறிய, சபை நடத்துனர்கள், பிரசங்கியார்கள், போதகர்கள் மற்றும் பிற உறுப்பினர்கள் கற்றுக்கொண்டால், பல பிரச்சனைகள் தவிர்க்கப்படும் அல்லது தீர்த்து வைக்கப்படும். இதன் விளைவாக சபையானது அதிக சமாதானத்தையும் குறைவான போராட்டத்தையும் அனுபவிக்கக் கூடும்.

---

குறிப்புகள்

[1]1ம் வசனம், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவைப் புசித்தல் பற்றிய பவுலின் கலந்துரையாடலை முடித்து வைக்கிறது. அவர் தமது சுய பிரயோஜனத்தை நாடாமல் "அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு" நாடியதாகக் கூறியபின்பு அவர், "நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்று கூடுதலாகக் கூறினார். 2ம் வசனமானது - 11ம் அதிகாரத்தில் மாத்திரமல்ல ஆனால் இந்த நிருபத்தின் எஞ்சிய பகுதி முழுவதிலும் - பின்தொடரும் கலந்துரையாடலுக்கு ஒரு அறிமுகமாகச் செயல்படுகிறது. கொரிந்தியர்கள் பவுலை நினைவில் வைத்து இருப்பதற்காகவும் பவுல் அவர்களுக்கு ஒப்புவித்திருந்த "பாரம்பரியங்களை அவர்கள் உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்ததற்காகவும்" அவர்களை பவுல் புகழ்ந்தார், இது அவர்களின் விசுவாசங்களும் செயல்முறைகளும் அவர் போதித்திருந்தவற்றைப் பொதுவாக அவர்கள் கடைப்பிடித்தனர் என்பதைச் சுட்டிக் காண்பித்தது. இருப்பினும் கொரிந்து நகரில் இருந்த சபை, பவுல் சுட்டிக்காண்பிக்க இருந்தபடி, அவர்களின் ஆராதனை மற்றும் உபதேசம் ஆகியவற்றைக் குறித்துச் சில பிரச்சனைகளைக் கொண்டிருந்தது. [2]மரியான் சோர்ட்ஸ் அவர்கள் "இந்தக்கூற்று தெளிவற்றதாக உள்ளது மற்றும் கோட்பாடுகள் ஏராளமாக உள்ளன" என்று கூறினார். (Marion L. Soards, *1 Corinthians*, New International Biblical Commentary [Peabody, Mass.: Hendrickson Publishers, 1999], 225.) ஹெரால்டு மேர் அவர்கள் பின்வரும் அர்த்தத்தைக் கருத்தாகத் தெரிவித்தார்: "பெண்ணானவள் ஆராதனையில் தனது தலையைச் சரியாக முக்காடு இட்டுக் கொள்வதில் குறிப்பிட்ட அதிகாரம் செயல்படுதலைக் கொண்டிருக்கிறாள். அவள் அங்கு இருக்கும் (நல்ல) தூதர்களுக்கு மரியாதை காண்பிக்கிறாள்" (W. Harold Mare, "1 Corinthians," in Frank E. Gaebelein, ed., *The Expositor's Bible Commentary,* vol. 10, *Romans-Galatians* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976], 256). [3]David Lipscomb, *A Commentary on the New Testament Epistles,* vol. 2, *First Corinthians*, ed. J. W. Shepherd (Nashville: Gospel Advocate Co., 1935; reprint, 1960), 167. [4]ஆராதனையில் (ஆண்கள் மற்றும் பெண்கள்) தலைகளில்

*முக்காடு இட்டுக்கொள்ளுதல் பற்றிய யூத ரோம மற்றும் கிரேக்கப் பழக்கவழக்கங்களைக் கல்வியாளர்கள் விரிவாக ஆராய்ச்சி செய்தனர். கொரிந்து நகரில் இந்த சூழ்நிலைக்கு மிகச்சிறந்த சாட்சியம் இவ்வசனப் பகுதியில் காணப்படுகிறது.* [5]*பெண்கள் தங்கள் தலைகளுக்கு முக்காடுகள் இட்டுக்கொள்ள வேண்டும் என்பதை நிரூபிப்பதற்குப் பவுல் நான்கு வகையான விவாதங்களைப் பயன்படுத்தினார் என்று நீல் லைட்ஃபூட் அவர்கள் சுட்டிக்காண்பித்தார்: (1) ஒரு இறையியல் ரீதியான விவாதம் - "பெண்கள் ஆணுக்குப் பின்னால் படைக்கப்பட்ட காரணத்தினால் அவர்கள் கீழ்ப்படிதலுடன் இருக்க வேண்டும்"; (2) தூதத்துவ விவாதம் - "பெண்கள் 'தூதர்களினிமித்தம்' முக்காடு இட்டுக்கொள்ள வேண்டும்"; (3) சமூகவியல் ரீதியான விவாதம் - "பெண்கள் முக்காடு இட்டுக்கொள்ள வேண்டும் ஏனெனில் சமூகம் அதையே எதிர்பார்க்கிறது"; மற்றும் (4) மதபோதனை ரீதியான விவாதம் - "சபைகள் எல்லாவற்றிலும் அதுவே வழக்கமாக உள்ளது" (காண்க 11:16).* (Neil R. Lightfoot, "Women, Headdress, Long Hair, Etc. - 1 Corinthians 11:2ff," *Abilene Christian College Lectures* [1975], 138-40.) [6]*இந்தக்கொள்கை புதிய ஏற்பாட்டில் மாறா நிலையுடன் போதிக்கப் பட்டுள்ளது. காண்க - எபேசியர் 5:23, 24; கொலோசெயர் 3:18; 1 பேதுரு 3:1.* [7]*ஒருவேளை, ஆண்கள் தங்கள் தலைகளில் முக்காடு இட்டுக்கொள்ளாமல் இருக்க வேண்டுமா மற்றும் பெண்கள் தங்கள் தலைகளில் முக்காடு இட்டுக்கொள்ள வேண்டுமா என்று கேட்பது இன்னும் மிகச்சரியானதாக இருக்கலாம், எனெனில் இவ்விரு நிபந்தனைகளுமே இவ்வசனப் பகுதியில் காணப்படுகின்றன. பெண்கள் தங்கள் தலைகளில் முக்காடு இடாதிருப்பது என்பதைக் காட்டிலும் ஆண்கள் தங்கள் தலைகளில் முக்காடு இட்டுக்கொள்ளுதல் என்பதே கொரிந்து நகரில் உள்ளடங்கிய பிரச்சனையாக இருந்திருக்கலாம் என்று* Richard E. Oster, Jr., *அவர்கள் வலியுறுத்தினார்.* (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 260-63.) [8]*இங்கு ஆண்கள் நீண்ட முடியைக் கொண்டிருத்தல் வெட்கக் கேடாக உள்ளது என்பதைப் பற்றிய விவாதமானது, இன்றைய நாட்களில் ஆண்கள் நீண்ட முடியைக் கொண்டிருத்தல் பாவம் நிறைந்ததாக உள்ளது என்று தன்னில் தானே நிரூபிப்பதில்லை.*